## சார்பு நீதிமன்றம், பெருந்துறை
## **OS** 76/2021

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 02.09.2025

Pw1 ( தங்கராஜ் )

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( பிரதிவாதி தரப்பில்)**

எனது சகலை மோகனசுந்தரத்தின் மகன் பெயர் பிரவீன் குமார் என்றால் சரி. மோகனசுந்தரத்தை சீனு என்றும் அழைப்பார்கள் என்றால் சரிதான். மற்றொரு சகலை பெயர் பழனிசாமி. பிரதிவாதியின் மகளின் புகாரின் பேரில் பெருந்துறை போலிசார் 2019 ம் ஆண்டு என் மீதும் என் மனைவி மற்றும் மோகனசுந்தரம் மற்றும் பிரவீன் குமார் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரி. அந்த வழக்கில் நான் முன்ஜாமீன் பெற்றேன் என்றால் சரி. புகாரில் தாவா சொத்தில் உள்ள கடையின் பூட்டை உடைத்து உள்ளே செல்ல முயச்சித்ததாகவும் அது சம்பந்தமாக ஏற்பட்ட தகராறின் அடிப்படையில் புகார் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் தற்போது குடியிருக்கவில்லை என்றால் சரிதான். பெருந்துறை குன்னத்தூர் ரோட்டில் சக்தி ஊாலோ பிரிக்ஸ் என்ற பெயரில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரி. சக்தி ஊாலோ பிரிக்ஸ் என்பது பங்குதாரர் கடையாகும். அதனுடன் இணைந்த வீட்டில் நான் 6 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தின் தரை தளத்தில் இரண்டு அறைகளும் , ஒரு கடையும் உள்ளது. கடை மற்றும் வீடு ஆகிய கட்டிடம் தார்சு கட்டிடமாகும். முதல் தளம் முழுவதும் வீடு அமைப்பு கொண்டுள்ளது. தரை தளத்திலிருந்து வடபுறம் சென்றால் முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டுக்கள் உள்ளது. தரைத்தளத்தில் உள்ள அறைகள் மற்றும் கடைகள் தற்போது காலியாக

உள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் 2009ம் ஆண்டு இறந்தார். தரைதளத்தில் உள்ள அறைகள் தார்சு கட்டிடம் 1990 ம் ஆண்டு கட்டப்பட்டது என்றால் சரி. தரைதளத்தில் உள்ள கடை மற்றும் முதல் தளத்தில் உள்ள வீடு முழுவதும் 2002-2003ம் வாக்கில் கட்டப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது தரைத் தள கடை மற்றும் முதல் தளத்தில் உள்ள வீடு அமைப்பு கட்டுவதற்கு பெறப்பட்ட அனுமதி வரைபடம் மற்றும் உத்தரவு என்றால் சரி. அது **பிசாஆ 1 மற்றும் 2** ஆகும். அந்த கட்டிடம் கட்டி சுமார் 6 ஆண்டுகள் கழித்து என் தகப்பனார் இறந்தார். என் தகப்பனார் இருந்தவரை தரைத் தளத்தில் உள்ள கடை பகுதியில் அவர் ஒரு மெஸ் நடத்தி வந்தார் என்றால் சரிதான். 2003 முதல் என் தகப்பனார் இறக்கும் வரை முதல் தளத்தில் பிரதிவாதி அவர் குடும்பத்துடன் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். அதற்கு பின்பும் தற்போது வரை பிரதிவாதி முதல் தளத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவாவில் நான் சொத்துககளை 3 இனமாக காண்பித்துள்ளேன். எனக்கு பாத்தியப்பட்ட இடம் நீங்கலாக மீதியுள்ள இடத்தை 3 இனமாக காண்பித்துள்ளேன். தாவா சொத்தில் தரைத்தளத்தில் உள்ள அறையில் என் தகப்பனார் மற்றும் தாயார் குடியிருந்தனர் என்றால் சரிதான். மேற்படி தாவா கட்டிடத்தில் குடிநீர் இணைப்பு வாங்குவதற்காக நானும் எனது தாயாரும் சான்றுருதி அலுவலர் முன்பு கையெழுத்திட்டு கொடுக்க ஆட்சேபணையின்மை கடிதம் என்றால் சரிதான். அது **பிசாஆ 3.** தாவா சொத்தில் உள்ள வீடு மற்றும் கடையின் கதவு எண் என்ன என்றால் 427/543 மற்றும் 543/1. தாவா சொத்து மேற்படி இரு கதவு எண்கள் மட்டும் தான் உள்ளது. முன்னால் உள்ள கடைக்கு என் தகப்பனார் இறக்கும் வரை மற்றும் வழக்கு தாக்கல் செய்யும் வரை அந்த கடைக்கு வரி ரசீது என் தகப்பனார் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். பி. சுப்பிரமணியம் என்பவர் எனது நண்பர், அவர் எனது உறாலோ பிளாக்ஸ் தொழிலிலும் பங்குதாரர். 2007 ம் ஆண்டு என் தகப்பனார் தரைத் தளத்தில் உள்ள கடை மற்றும் அறைகள் எனக்கும், முதல் தளத்தில் உள்ள வீடு பிரதிவாதிக்கும் என பேசி ஒரு வாய்மொழி ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. அந்த வாய்மொழி ஒப்பந்தத்தை என் தகப்பனார் சொன்னார், நான் ஒப்புக்கொண்டடேன், அது பதிவு செய்யப்படவில்லை. நான் சொல்வதபோல் வாய்மொழி ஒப்பந்தம் எதுவும் என் தகப்பனார் பேசவில்லை என்றும், அவ்வாறு

நான் ஒப்புக்கொண்டதாக சொல்வது தவறு என்றும் வழக்கிற்காக நான் அதை பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் காலம் வரை தரை தளத்தில் உள்ள அறைகள் மற்றும் குடிநிர் இணைப்புக்கான ரசீது என் பெயரில் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வாய்மொழி ஒப்பந்தம் குறித்து எனது நெருங்கிய சகலை மற்றும் வியாபார பங்குதாரர் ஆகியோர் உதவியுடன் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2007 ம் ஆண்டு வாய்மொழி ஒப்பந்தத்திற்கு பின் தான் முதல் தளத்தில் கட்டிடம் எழுப்பியதாக நான் வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வாய்மொழி ஒப்பந்தத்தில் புதிதாக கட்டப்பட உள்ள முதல் தளம் சொத்தை பிரதிவாதி வைத்துக் கொள்வது என எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.09.02 17:29:47 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS